REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

நாள் தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 11உ செவ்வாய் (23—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 12உ புதன் (24—4—57) [இதழ் 270

குடியரசுத் தலைவர் தேர்தல்:

காஷ்மீர் சட்ட சபை உறுப்பினர்களுக்குத் தனிச் சலுகை!

தேர்தலில் தோற்றவர்களும் வாக்களிப்பர்!

பண்டிட் பிரேம்நாத் டோக்ரா கண்டனம்

ஜம்மு, ஏப். 22—

குடியரசுத் தலைவர் தேர்தல் மே திங்கள் 6-ம் நாள் நடைபெறப் போகிறது. தேர்தலில் வெற்றிபெற்ற மக்கள்சபை உறுப்பினர்களும், மேல்சபை உறுப்பினர்களாக இருந்துவருபவர்களும் வாக்களிக்க உரிமை கொண்டிருப்பவர்களாவர்.

மாநில சட்டசபை உறுப்பினர்களுக்கு, குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க உரிமை கிடையாது. மாநிலங்கள் அனைத்துக்கும் இது பொதுவாகும்.

ஆனால், காசுமீர் மாநிலத்தைப் பொறுத்தவரையில், இப்பொது விதி செல்லாது. மற்ற மாநிலங்கள் பெற்றில்லாதத் தனிச்சலுகை காசுமீர் மாநிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில், காசுமீர் சட்டசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டு வாக்களிப்பர்.

இவ்விசித்திரப் போக்கை, காசுமீர் பிரஜா-பரிஷத் தலைவரான பண்டிட் பிரேம்நாத் டோக்ரா கண்டித்துள்ளார்.

"மற்ற மாநில சட்டசபை உறுப்பினர்கள் பெற்றில்லாத தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் காசுமீர் மாநிலம் தனிச் சிறப்பாகப் பெற்றிருக்கும் விசித்திரத்தைவிட, தேர்தலில் தோற்றுப்போனவர்கள்—தேர்தலில் கலந்துகொள்ளாதவர்கள்—ஆனாலும் பழைய உறுப்பினர்களாக இருந்துவருகின்றவர்களை, தலைவர் தேர்தலில் வாக்களிக்க இடமளித்திருப்பது மாபெரும் விசித்திரமாகும்" என்று டோக்ரா எடுத்துக்காட்டி சாடியுள்ளார்.

"அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற சட்டசபை உறுப்பினர்களுக்கே தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்" என்றும் அவர் மாற்றம் உரைத்துள்ளார்.

வெளிநாட்டு வியாபாரத்தில் உரிமை வேண்டும்

கிழக்கு பாகிஸ்தான் தன்னாட்சி பற்றி விளக்கம்

பிரதமர் போக்குபற்றி அவாமி லீக் தலைவர் ஆச்சரியம்

டாக்கா, ஏப். 22—

"அவாமி லீக் குழு உறுப்பினராகவும், எட்டு கோடி பாகிஸ்தான் மக்களின் பிரதமராகவும் இருப்பதுடன், கிழக்குப் பாகிஸ்தானுக்குத் தன்னாட்சிகோரி போராடுவது என்ற கொள்கையை உள்ளடக்கமாகக் கொண்ட 21 அம்சத் திட்டத்தைத் தீட்டிய 70 சட்டசபை உறுப்பினர்களில் தாமும் ஒருவராக இருந்துவரும் பிரதமர் சுராவர்த்தி, மேற்படி சுயாட்சி கோரிக்கையை எள்ளிநகையாடுவது ஆச்சரியமாக இருக்கிறது.

"இக்கோரிக்கை, கிழக்கு பாகிஸ்தானில் உள்ள 4½ கோடி மக்களால் மட்டுமே கோரப்பட்டிருப்பதல்ல; காலஞ்சென்ற ஜின்னா ஏனைய முஸ்லிம் தலைவர்கள் உள்ளிட்ட இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள முஸ்லீம்கள் அனைவரும் 1940-ம் ஆண்டில் ஒருமனமாக முழங்கிய கோரிக்கையே, இந்த சுயாட்சிக் கோரிக்கை யாகும்."

இவ்வாறு, கிழக்கு பாகிஸ்தான் சட்ட சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள தன்னாட்சித் தீர்மானத்திற்கு எதிராகப் பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி கூறியுள்ள கூற்றுக்கு பதிலளித்துள்ளார், அவாமி லீக் தலைவரான மௌலானா பாஷானி.

அவர், தன்னுடைய அவாமி லீக் தலைவர் பதவித் துறப்பை வலியுறுத்துவாரா, வாபஸ் பெறுவாரா எனக் கேட்கப்பட்டதற்கு, 'அப்பிரச்சினை, பிரதமர் சுராவர்த்தி அவாமி லீக் கட்சியின் சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்து செயல்பட முனைவதையும், 21 அம்சத் திட்டங்களை நிறைவேற்ற உறுதி கொள்வதையும் பொறுத்திருக்கிறது' என, மௌலானா பாஷானி பதிலளித்தார்.

'மாகாண தன்னாட்சி கிழக்குப் பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்டால்தான், மேற்படி பகுதி மக்களுக்குள்ள குறைபாடுகளைக் களைந்து நல்வாழ்வு தரமுடியும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள்கோரும் தன்னாட்சியில், வெளிநாட்டுச் செலாவணியும், வெளிநாட்டு வியாபாரமும் உள்ளடங்கி இருக்கின்றன"

என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார்.

இலங்கை செல்லும் இந்தியப் பிரதமர்

கொழும்பு, ஏப். 23—

பௌத்தம் ஆரம்பமாகி 2,500 ஆண்டுகள் முடிவடைவதையொட்டி இங்கு நடைபெறும் புத்த ஜெயந்தி விழாவின் இறுதியில் கலந்து கொள்ளுமாறு இலங்கை சர்க்கார் அனுப்பிய அழைப்பை ஏற்றுக்கொண்டு பண்டித நேரு மே 17-ந் தேதி இலங்கை சென்று மூன்று நாட்கள் தங்குவாராம்!

ஷேக் அப்துல்லா காவல் காலம் வளருகிறது

கூட்டுத் தோழர்களையும் காவலிலேயே வைத்திருக்கக் கட்டளை

ஜம்மு, ஏப். 21—

காஷ்மீர் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவின் காவல் காலம் மே. 5-ந் தேதியோடு முடிவடைகிறது. அவரை மேலும் ஆறு மாதங்களுக்குக் காவல் கைதியாக வைத்திருக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அவருடைய அமைச்சரவையில் முறையே நிலவரி அமைச்சராகவும், துணை நிதி அமைச்சராகவும் பணியாற்றிய மீர்சா முகமத் அப்சல் பேக், முபாரக் ஷேக் ஆகிய இவர்களின் காவல் காலமும் அக்டோபர் இறுதி வரையில் நீடிக்கப்பட்டிருக்கிறது.

1953-ம் ஆண்டு ஆகஸ்டு 9-ந் தேதி முதல், ஷேக் அப்துல்லா பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு பாதுகாப்புக் கைதியாக, மலைவாச இடமான குட் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் இரு சகாக்களும் ஏற்கனவே காவலில் வைக்கப்பட்டிருந்த ஜம்மு மத்திய சிறையிலிருந்து, அண்மையில்தான் ஸ்ரீநகர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வருந்துகிறோம்

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அன்பில்-தருமலிங்கம் அவர்களின் அன்னையார் திருவாட்டி ஆச்சிக்கண்ணு அம்மையார் (வயது 56) 21—4—57 மாலை 4-மணிக்கு இயற்கை யெய்தினார்கள் என்ற செய்தியை வருத்தத்தோடு அறிவிக்கிறோம்.

22—4—57 மாலை 4-மணியளவில் சவஅடக்கம் நடைபெற்றபோது, கழகத் தோழர்கள் பலரும், ஊர் முக்கியஸ்தர்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். திருச்சி மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் தோழர் பொன்மலை பராங்குசமும், நகரக் கழகச் சார்பில் தோழர்கள் நடராசன், எம். எஸ். மணி ஆகியோரும் அன்னையாருக்கு மலர் மாலை அணிவித்து தங்களின் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

அன்னையைப் பிரிந்து வருந்தும், தோழர் அன்பில்-தருமலிங்கம் அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் உரித்தாக்குக்றோம். (ஆ-ர்)

'சுராவர்த்தி ஒழிக! கூட்டு தேர்தல் முறை ஒழிக!'

பிரதமரின் கொடும்பாவி தீக்கிரை!

பாகிஸ்தான் மக்கள் சபைமுன் ஆர்ப்பாட்டம்

கூட்டுத் தேர்தல் முறைக்கு எதிராக முஸ்லிம் லீக் குரலெழுப்பல்

கராச்சி, ஏப். 22—

கூட்டுத் தேர்தல் முறையைப் புகுத்த பாகிஸ்தான் அமைச்சரவை முன்வந்திருக்கின்றது. அம்முறையை எதிர்த்து, பாகிஸ்தான் மக்கள்சபை முன், முஸ்லிம் லீகைச் சேர்ந்த சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர். பிரதமர் சுராவர்த்தியின் கொடும்பாவி ஒன்றை மக்கள் சபைமுன் மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கொளுத்தினர்.

பாகிஸ்தான் அடிப்படை இலட்சியத்திற்கு, கூட்டுத் தேர்தல் முறை முரணானது என்று பாக். முஸ்லிம் லீக் கருதுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக எந்தவித நெருக்கடியும் ஏற்படாமல் இருப்பதற்காக தக்க பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது. எதிர்பார்த்தபடி இல்லாமல் ஆர்ப்பாட்டம் மிக மிகச் சாதாரண சம்பவமாகவே முடிந்துவிட்டது.

ஆர்ப்பாட்டத்தினர் 'சுராவர்த்தி ஒழிக! கூட்டுத் தேர்தல் முறை ஒழிக!' என முழக்கமிட்டனர்.

★ ★

இந்தியக் குடியரசுத் தலைவரின் பாராட்டை இந்த ஆண்டில் பெற்ற ஒரே தமிழ்த் திரைப்படமான 'குலதெய்வம்' திரைக் கதை, வசனம் எழுதிய தோழர் முரசொலி-மாறன் எம். ஏ.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—4—57 செவ்வாய்

சிமெண்ட் தொழிற்சாலை

இந்தியப் பேரரசின் தொழில் மயக் கொள்கை, தென்னகத்தைப் புறக்கணித்து ஒதுக்குவதாக இருந்துவருகிறது எனப் பரவலாகக் கூறப்பட்டுவருகிறது. இவ்வாறு குறைபட்டுக் கொள்ளுகின்றவர்கள் பட்டியலில் நாம் மட்டும் இல்லை. சில பல காங்கிரசுத் தலைவர்களும், பொதுவுடைமைக் கட்சியினரும்கூட இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

தொழில் துறையில் தென்னகத்தை இந்தியப் பேரரசு அலட்சியப்படுத்திவரும் ஓரவஞ்சனைப் போக்கை முதல் ஐந்தாண்டுத் திட்டம் தெள்ளத் தெளிய சுட்டிக்காட்டி இருக்கிறது. அதுபோன்றே தொழில் ஏற்பாட்டில் தென்னகம் வழக்கம்போல் இந்தியப் பேரரசால் வஞ்சிக்கப்பட்டிருப்பதை, இரண்டாவதுத் திட்டமும் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டி இருக்கிறது.

தென்னகத்தைத் தொழில் மயமாக மாற்றி அமைக்கும் பிரச்சினையில் இந்தியப் பேரரசு கொண்டுள்ள மனப்போக்கை, வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒப்புக்கொண்டும் அதற்கான பரிகாரத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தியும், தேர்தலில் கலந்துகொண்ட கட்சிகள் அனைத்தும், தம் தம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளன. இவ்வாறு மற்றக் கட்சிகள் நிலைமையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டதுடன் நியாயமும் கோரியிருப்பதானது, இத்துறையில் இந்தியப் பேரரசு கொண்டிருக்கும் உள்ளக் கிடக்கையை நமது கழகம் துவக்க முதலே எடுத்துக் காட்டி கண்டித்து வரும் அரும்பணிக்கு, நாம் எதிர்பாராமலும் விரும்பாமலும் கிடைத்திருக்கின்ற அறவழி ஆதரவாகும்.

தென்னகத்தைத் தொழில் மயமாக்குவதில், ஆங்கில ஏகாதிபத்தியமும் சமத்துவ கண்ணோட்டத்துடன் நடந்து கொள்ளவில்லை. அதே அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்தியப் பேரரசும் இத்துறையில் செயல்பட்டுவருவது, அரசியல் விசித்திரமேயாகும்.

அரசாங்கத் துறையில் தென்னகத்தில் துவக்கப்படவேண்டிய தொழில்கள் பற்றிய விவகாரம் எப்படியோ கிடக்கட்டும். தனியார் துறையில் துவக்கப்பட வேண்டிய தொழில்கள் பற்றி ஆராய வேண்டியது இன்றியமையாததாகும்.

தொழில் துறையில் வடநாடு முன்னேற்றம் பெற்றிருப்பதற்கும், தென்னாடு பின்தங்கிக் கிடப்பதற்கும் காரணம் காண விழைவது இயல்பேயாகும். பெரும் முதலீடு செய்ய வடநாட்டில் பெரும் பெரும் முதலாளிகள் இருப்பதாகவும், தென்னகத்தில் அதுபோன்று முதலீடு செய்யக்கூடிய முதலாளிகள் கிடையாது என்றும் காரணம் காட்டப்படுகிறது. அதன் விளைவாகவே தென்னகம் தொழில் துறையில் வடநாட்டைவிட பலவகையில் பின்தங்கிக் கிடப்பதாகவும் சமாதானம் சொல்லப்படுகிறது. இந்தச் சமாதானத்தைக்கேட்டு தென்னகத்தார் திருப்தி கொண்டுவிடமாட்டார்கள். இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைப் போக்கையும் மன்னித்து மறந்துவிடவும்மாட்டார்கள்.

இந்தச் சமாதானத்தில் இரு உண்மைகள் உள்ளடங்கி இருப்பதாக நாம் யூகிக்கலாம். அதாவது, தென்னாட்டில் முதலீடு செய்யக்கூடிய தென்னாட்டவர் கிடைக்கின்றவரையில் தென்னாடு தொழில் துறையில், இப்பொழுது இருப்பதேபோல் தொழில் துறையில் பின்தங்கித்தான் கிடந்தாக வேண்டும் என்பது ஒன்று, தென்னாட்டை உடனடியாகத் தொழில்மயமாக்க வேண்டுமானால், தென்னாட்டில் முதலீடு செய்து தொழில்களைத் துவங்கும்படி, வடநாட்டு முதலாளிகளுக்கு வகுத்துவைத்துத் தென்னாட்டவர் வேண்டிக்கொள்ள வேண்டும் என்பது மற்றொன்று.

சுருக்கமாக இதைக் குறிப்பிட வேண்டுமானால், தென்னாடு தொழில் மயமாக வேண்டும் எனத் தென்னாட்டவர்கள் கோரி வருவதைக் கைவிட வேண்டும் அல்லது வடநாட்டு மூலதனம் தென்னாட்டில் குடியேறி சுரண்டுவதற்கு விருப்புடன் ஒப்பவேண்டும் என்பதேயாகும். இதுதான் தென்னாட்டைத் தொழில் மயமாக மாற்றி அமைப்பதில் இந்தியப் பேரரசின் உள்ளக் கிடக்கையாகும்.

நாமாகக் கற்பனை செய்துகொண்டு, இக்கருத்தை இந்தியப்பேரரசின் மீது சுமத்தவில்லை. தக்கச் சான்றுகளுடன்தான் இக்கருத்தை நாம் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறோம்.

ஏழு சிமெண்ட் தொழிற்சாலைகள்வரை ஆந்திர பிரதேசத்தில் துவங்கலாம் என இந்தியப்பேரரசு அனுமதி அளித்திருக்கிறது. அவை அனைத்தும் தனியார் துறையில் துவங்கப்படவேண்டியவையாகும்.

இதே நேரத்தில், அரசாங்கத் துறையில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க தன்னை அனுமதிக்கவேண்டும் என ஆந்திர ஆட்சி இந்தியப் பேரரசைக் கோரி இருக்கிறது. ஆனால், இந்தியப் பேரரசோ, அதை அனுமதிக்க முடியாது எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டது.

தனியார் துறையில் துவங்குவதற்கு என, ஏழு சிமெண்ட் தொழிற்சாலைகள்வரை அனுமதி கொடுக்க, மனமும் துணிவும் இந்தியப் பேரரசிற்கு இருந்து இருக்கின்றது. ஆனால் அரசாங்கத் துறையில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையைத் துவங்க ஆந்திர ஆட்சிக்கு அனுமதி தருவதற்கு மட்டும் இந்தியப் பேரரசிற்கு மனமும் துணிவும் இல்லாமல் இருக்கிறது!

இந்தியப் பேரரசு இரட்டைப் போக்கில் நடந்துகொள்ள முன்வருகிறது. இந்த இரட்டைப் போக்கில் உள்ளடங்கி இருக்கும் இரகசியம்தான் என்ன? நாளை ஆராய்வோம்.

ரூ. 114 இலட்சம்!

இந்தியாவுக்கு பாகிஸ்தான் இன்னும் செலுத்தவில்லையாம்!

கராச்சி, ஏப். 22—

கால்வாய்த் தண்ணீர் விநியோகம் செய்ததற்காக மொத்தம் ரூ. 114 இலட்சம் இந்தியாவுக்கு பாகிஸ்தான் தரவேண்டியிருப்பது இன்னும் செலுத்தப்படவில்லையாம்!

1948ல் இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இந்தக் கட்டணம் சேரவேண்டும்.

இந்தியா பலமுறை வற்புறுத்தியும்கூட பாகிஸ்தான் பணம் செலுத்தாமல் இருந்து வருகிறதாம்.

மனிதப் பண்பாட்டிற்கு விரோதமாகுமே என்று அஞ்சி, இந்தியா, தண்ணீர் விநியோகத்தை நிறுத்தவில்லையாம்!

விஞ்ஞான வளர்ச்சி

பயங்கரத்தின் பிறப்பிடமா?

உலகத்திற்குப் புத்துயிர் அளிக்க இவைகளால் முடியாதாம்!

வாடிகன், ஏப். 21—

"மனிதன் தன் சாதனைகளுக்கு மேலும் மேலும் எசமானனாகி, தன் முயற்சிகளின் தரத்தை உயர்த்துகிறான். விஞ்ஞானம், தொழில் நுட்பம், நிறுவன அமைப்பு ஆகியவை மனிதனுக்கு பயங்கரத்தின் பிறப்பிடமாக விளங்கியுள்ளது. இவைகள் மட்டும் முன்னேறுவதால் உலகத்திற்குப் புத்துயிர் அளித்துவிட முடியாதென்பது இப்போது தெளிவாகிறது,"

என்று, 'ஈஸ்டர்' நாளை முன்னிட்டு, போப்பாண்டவர் வெளியிட்டுள்ளச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கைத்தறிக்கு மேலும் 'தள்ளுபடி' சலுகை

பம்பாய், ஏப். 22—

மே 5-ந் தேதி முதல் 11-ந் தேதி வரையில் இந்தியா முழுமையிலும் 'அகில இந்திய கைத்தறி வாரம்' கொண்டாடப்படும்.

இந்த வாரத்தில் விற்பனையாகும் கைத்தறித் துணிகளுக்கு மேலும் கூடுதலாக ரூபாய்க்கு 3 புதிய காசுகள் வீதம் தள்ளுபடி (ரிபேட்) அளிக்கப்படுமாம்.

பம்பாய் மாநிலத்தில் தற்போது 12 புதிய காசுகளும், மற்ற மாநிலங்களில் 9 புதிய காசுகள் வீதமும் தள்ளுபடி தரப்படுகிறது.

6 புதிய காசுகள் தள்ளுபடி வழங்கப்படும் இடங்களில் இந்த வாரத்தில் 9 புதிய காசுகள் தள்ளுபடி வழங்கப்படுமாம்.

அரசாங்கச் செலவு

குறைத்துக் கொள்ளப்படும்

பாரிஸ், ஏப். 22—

பிரான்சின் மொத்தச் செலவு நான்கு இலட்சம் பிராங்குகள் ஆகும்.

பிரான்சின் தற்போதைய பொருளாதார சிக்கல்களைக்கருதி அரசாங்கச் செலவில் 25,000 பிராங்குகளைக் குறைத்துக் கொள்ள பிரெஞ்சு அரசு முன்வந்துள்ளது.

செயற்கைச் சந்திரன்

ராக்கெட் மூலம் வானவெளியில் மிதக்கவிட முயற்சி

வாஷிங்டன், ஏப். 22—

பூமியைச் சுற்றி ஒரு செயற்கை சந்திரனை மிதக்கவிடுவதற்கான ஒரு ராக்கெட் இயந்திரத்தை அமெரிக்கா சோதித்துள்ளது.

இந்தச் செயற்கைச் சந்திரனை 3 ராக்கெட் இயந்திரங்களால் உந்தப்பட்டு வான வெளியில் மிதக்க விடப்படும்.

கடலூரில் பாராட்டுக் கூட்டம்

அண்ணா, பொதுச்செயலாளர், கழக சட்டசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்

கடலூர் நகர தி. மு. கழகச் சார்பில் 17—4—57 மாலை 6-30 மணிக்கு மஞ்சகுப்பம் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், வெற்றி பெற்றக் கழக சட்டசபை உறுப்பினர்களுக்குப் பாராட்டுதலும் வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியறிதலும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முதன் முதலாகப் பொதுத் தேர்தலில் ஈடுபட்ட தி. மு. கழகம், தனது சக்திக்கு மீறியவகையில் அதிகாரவர்க்கத்தின் அத்திகளுக்கும், மாற்றுக் கட்சிகளின் எதிர்ப்புகளுக்கு மிடையே குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்றிருக்கிறதென்றால், கழகத்தின் கொள்கை—கோட்பாடுகளைப் பொது மக்கள் பெரிதும் ஆதரித்து வருகிறார்கள் என்பதையே எடுத்துக் காட்டியிருக்கிறது.

"தேர்தலில் தி. மு. கழகத்திற்கு எதிரிடையான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் சிலர், இன்று உண்மையை உணர்ந்து கழகத்தில் சேர முன்வந்திருப்பது, நமக்குத் தேர்தலில் கிடைத்த மற்றொரு வெற்றியாகும். இவ்வித பெரும் சக்தியைத் திரட்டித்தந்த வாக்காளர் பெருமக்களுக்குத் தி. மு. கழகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

"அண்ணா அவர்களின் தலைமையில் சட்ட மன்றப் பணியில் ஈடுபடப்போகும் நமது அருமைத் தோழர்கள் தங்களின் கடமைகளை இனிது நிறைவேற்றப் பொதுமக்களும், கழகத் தோழர்களும் பெருந்துணையாய் இருத்தல் வேண்டும்."

அடுத்து, தி. மு. கழக சட்ட மன்ற உறுப்பினர்களான, ஏ. கோவிந்தசாமி, கள்ளக்குறிச்சி நடராசன், ஆனந்தன், ஆத்தூர் எம். பி. சுப்பிரமணியம், இருசப்பன், விருத்தாசலம் எம். செல்வராஜ், சத்திய வாணிமுத்து, மு. கருணாநிதி க. அன்பழகன் ஆகியோர், 'சட்ட மன்றப் பணியில், கழகம் காட்டும் வழியினை அறிந்து அண்ணா அவர்களின் தலைமையிலே நற்பணியாற்றுவோம்' என்று உறுதி தெரிவித்தும், வாக்காளர்களுக்கு நன்றி அறிவித்தும் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து, தோழர்கள் பொன். சொக்கலிங்கம் வி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர்.

அடுத்தபடியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபாடு கொண்ட விவரங்களையும், அடைந்துள்ள வெற்றியினையும், அந்த வெற்றியில் அடங்கியுள்ள மாபெரும் சக்தியையும், காங்கிரசார் வாங்கியுள்ள ஓட்டுகளின் தரத்தையும் விளக்கிப் பேசியதுடன், வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக அண்ணா அவர்கள், நீண்ட நேரம் சொற்பொழிவாற்றுகையில், சட்டமன்றப் பணியில் ஈடுபடப்போகும் தி. மு. கழகம் எவ்வாறு அதன் கடமைகளை நிறைவேற்ற முயலுமென்பதையும், ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய பொறுப்பினையும், கழகம் எதிர்காலத்தில் ஆற்றவிருக்கும் பணியினையும் குறிப்பிட்டதோடு, வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியும் வணக்கமும் தெரிவித்துக்கொண்டார்.

அண்ணா அவர்களுக்கும், மற்ற தோழர்களுக்கும் தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள் ஆகியவைகள் சார்பில் கைத்தறி துணிகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

செயலாளர் கோவிந்தராசன் நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 10-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

தேநீர் விருந்து

17—4—57-ல் கடலூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்த அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் மற்றும் தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களான தோழர்கள் மு. கருணாநிதி, தோழியர் சத்திய வாணிமுத்து, எம். செல்வராஜ், சி. நடராசன், ஆனந்தன், ஏ. கோவிந்தசாமி, இருசப்பன் ஆகியோருக்கு தோழர் ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், அவரது தோழர்களும் மாலை 5 மணிக்கு, கடலூர் டவுன் ஹாலில் தேநீர் விருந்து நடத்தினர்.

கடலூர் நகராண்மைக் கழக உறுப்பினரும், அண்மையில் தி. மு. கழகத்தில் உறுப்பினராய்ச் சேர்ந்தவருமான தோழர் வேலு அவர்கள் தலைமை வகித்து, அண்ணா அவர்களையும் மற்ற அனைவரையும் வரவேற்றுப் பாராட்டிப் பேசினார்.

இவ்விருந்து உபசாரத்திற்கு உள்ளூரிலுள்ள கழகத் தோழர்களும், பிரமுகர்களும் மற்றும் தோழர்கள் அ. பொன்னம்பலனார், பேராசிரியர் மா. நி. தசரதன், காஞ்சி - இராசகோபால், வி. கிருஷ்ணமூர்த்தி, பொன். சொக்கலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தீண்டாமையை ஒழிக்க முதல் வழி?

ஆந்திர முதலமைச்சர் அறிவுரை

ஐதராபாத், ஏப். 19—

"தீண்டாமையை அறவே ஒழிப்பதற்கு முதல் படியாக—அடிப்படை அவசியமாக தாழ்த்தப்பட்ட மக்களிடையே தற்போது நீடித்துவரும் சாதி—உபசாதி வேற்றுமைகளை அகற்ற முன்வரவேண்டும்"

என்று, ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவிரெட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

"அரசாங்கம் தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக இலட்சக்கணக்கில் ரூபாய் செலவுசெய்து வருகிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தில் நிலவும் வேறுபாடுகளை அகற்றுவதற்கு படித்த அரிசன மக்கள் பாடுபட வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அடுத்து பேசிய ஆந்திர மாநில சமூகநல அமைச்சர் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறி முக்கிய பதவிகளைவகித்து வருகின்றனர் என்றும், கிராமப்புறங்களில்தான் தீண்டாமை நிலவுகிறது என்றும், இந்துக்களிடையே தாழ்த்தப்பட்டவர்களும் மனிதர்கள்தான் என்பதை வலியுறுத்தும் முறையில் அரிசன மக்கள் பாடுபடவேண்டும் என்றும், பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் இத்தீமையைத் திடீரென ஒழித்துவிட முடியாதென்றும் கூறினார்.

'படிப்பற்ற மீனவர்கள் எளிதாகப் பயிற்சிபெற முடியும்'

இயந்திரப் படகுகள் அவசியம் பற்றி விளக்கம்

ஆழ்கடலில் மீன்பிடிக்க பயிற்சிப்பள்ளி துவக்கம்

நாகப்பட்டிணம், ஏப். 20—

இயந்திரப் படகுகள் மூலம் ஆழ்கடலில் வெகுதூரம் சென்று மீன் பிடிக்கும் திட்டத்தில் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க நாகப்பட்டினத்தில் ஒரு பயிற்சிப்பள்ளி துவக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநில தொழில் வர்த்தக டைரக்டர் அருள்தாஸ் தலைமையில் சட்டசபை உறுப்பினர் எஸ். இராமலிங்கம் திறந்து வைத்தார்.

இந்தப் பயிற்சிப் பள்ளியில் துவக்கத்தில் 15 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

தலைவர் பிரசங்கம்

தலைமை தாங்கிய திரு. அருள்தாஸ் பேசியதாவது—

"பழைய மீன் பிடிக்கும் வழக்கங்களில் உள்ள வருமானத்தைப் போல் பன்மடங்கு வருமானம் வரக்கூடிய இயந்திரப் படகுகளை அரசாங்கம் புகுத்தத் தீர்மானித்து, மேற்படி படகுகளைச் செலுத்துவதற்காக நம்முடைய மாநிலத்தில் 2 இடங்களில் பயிற்சி நிறுவனங்களை அமைத்துள்ளது. இயந்திரப் படகுகளை அதிகம் பயன் படுத்துவதற்கு முன்பு இயந்திரப் படகுகளில் மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியம்.

"இந்தப் படகுகளின்மூலம் நாளொன்றுக்கு ரூ. 6, 7 செலவில் ரூ. 75-லிருந்து ரூ. 100 வரை வருமானம் அடையமுடியும்.

"தூத்துக்குடியில் இரண்டு இயந்திரப் படகுகளின் மூலம் இரண்டு மாதங்களில் செலவு போக ரூ. 5,000 இலாபம் கிடைத்துள்ளது. நிலத்தில் கிடைக்கும் வருமானத்தைவிட எளிதாகச் சமுத்திரத்திலிருந்து அதிக வருமானம் கிடைக்கிறது.

"படிப்பில்லாத மீனவர்களும் எளிதாக இந்தப் பயிற்சிபெற முடியும். சென்னை மாநிலம் ஒன்றுதான் இரண்டு பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ளது. இப்படகுகளை தற்போது ஆகும் செலவு ரூ. 10,000 விட மிகக் குறைந்த செலவில் கட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

"சில மீனவர்கள் இயந்திரப் படகுகள்மூலம் மீன் பிடித்தால் மீன்கள் குறைந்துவிடுமென அறியாமை காரணமாகக் கூறி வருகிறார்கள். கடலில் எல்லையற்ற மீன் கூட்டங்கள் உள்ளன. அதைப்பற்றி மீனவர்கள் கவலைப்பட வேண்டாம். இயந்திரப் படகுகள் மூலம் எந்த இடத்திலும் கரையேற முடியும். அதனால் எஞ்சின்களுக்குச் சேதமேற்படாது. நாகையில் மீனவர்களின் வசதிக்காக ஒரு துறைமுகம் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. மேற்படி திட்டம் சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இது அமைக்கப்படும்.

"கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இயந்திரப் படகுகளை கையாளுவதிலிருந்து வருமானத்தில் 52 சதவிகிதம் சங்கத்திற்கும், 48 சதவிகிதம் ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊழியரும் மாதம் சராசரி ரூ. 150 சம்பாதிக்க முடியும்."

பயிற்சிப் பள்ளியில் 15 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

* * *

மாமல்லபுரத்தில் மீன் பிடிப்பு நிலையம் ஏற்படுத்தக் கோரிக்கை

சென்னை கவர்னர் தம்பதிகள் மாமல்லபுரத்திற்குச் சென்று அங்குள்ள சிற்பக்கலை பயிற்சிக் கூடத்தையும் ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யப்படும் நிலங்களையும் சுற்றிப் பார்த்தனராம்; அப்போது கவர்னரிடம், ஆழ்கடலில் சலனப் படகுகளில் சென்று மீன் பிடிக்கும் நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரும் மனு ஒன்று தரப்பட்டிருக்கிறது.

'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்'

இரா. நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, ஏப். 20—

கலைத் துறையில் தொண்டாற்றிவரும் லலிதகலா மன்றத்தின் சார்பில், சேவா ஸ்டேஜ் குழுவினர், தோழர் பி. எஸ். இராமையா எழுதிய 'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்' என்ற நாடகத்தை சென்னை அண்ணாமலை மன்றத்தில் நேற்று மாலை நடித்துக்காட்டினர்.

நாடகத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினர்.

இன்றைய சமூகத்தில் காணப்படும் கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய சில கேடுகளை அடிப்படையாகக்கொண்டு நகைச்சுவை ததும்பும் கதை அமைப்புடனும் இன்புறச் செய்யும் தமிழ் இசைப் புடனும், அழகிய காட்சி அமைப்புகளுடனும் நாடகம் நிகழ்ந்தது.

எஸ். வி. சகஸ்ரநாமம் பிரசிடெண்ட் பஞ்சாட்சரமாகவும், மற்ற துணை நடிகர்கள் பொருத்தமான பாத்திரங்களை ஏற்றும் தரம் குறையாது நடித்ததைப் பாராட்டியும், இத்தகைய சமூக—பொழுதுபோக்கு நகைச்சுவை நாடகங்களின் மூலம் சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் பணியினைத் திறம்படச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டும், நடிகர் சகஸ்ரநாமம் அவர்களைப் பாராட்டியும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தனது தலைமை உரையை நிகழ்த்தினர்.

நாடகத்தில் குமாரி சந்திரகாந்தாவின் நாட்டியமும் போற்றத்தக்க முறையில் இருந்தது.

கீரனூர் தி. மு. கழகத் துவக்கவிழா

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்து கொண்டார்

திட்டக்குடி அடுத்த கீரனூர் தி. மு. கழகத் துவக்கவிழா 18—4—57 மாலை 7-மணிக்கு இனிது நடந்தேறியது. வளைவுகள் தோரணங்கள் ஆகியவைகள் ஊரெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இத்துவக்க விழாவிற்கு வசிஷ்டபுரம் நாராயணன் தலைமைவகித்தார்.

தோழர் பிச்சைமுத்து கழகக் கொடியை உயர்த்தி வைத்துப் பேசினர்.

அடுத்தபடியாக தி. கோ. சிங்காரம், இரா. மாணிக்கம் ஆகியோர் கழகத்தைத் துவக்கியுள்ள தோழர்கள் ஆற்றவேண்டிய அரும்பணிகளை விளக்கிப் பேசினர்கள்.

இறுதியாக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தின் கொள்கை—கோட்பாடுகளை விளக்கியும் எதிர்காலத்தில் கழகத்திற்குள்ள பொறுப்புகளையும், அதற்கேற்ப கழகத் தோழர்கள் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டித் தரவேண்டியிருப்பதையும், அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலைப்பற்றியும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

பல கிளைகளின் சார்பில் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

நன்றியறிவிப்பு

தி. மு. கழகச் சார்பில் பெரம்பலூர் சட்ட மன்ற (தனித்) தொகுதிக்குப் போட்டியிட்ட எனக்கு, வாக்காளர்கள் கொடுத்த ஆதரவும், ஒத்துழைப்பும் கழகக் கொள்கைக்கு வெற்றிப் பாதையாக அமைந்துள்ளதுடன், எதிர்காலத்தில் கழகம் சிறப்பாக வலிவுடன் இருக்கும் தன்மையை எடுத்துக் காட்டியதற்கும் தெரிவித்துக் அன்பான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்; மேலும் கழகப் பணிகளில் ஈடுபடுவதில் என்னாலான தொண்டினை மக்களுக்குச் செய்வேனென உறுதி கூறுகிறேன்.

கழகம் திறம்பட செயலில் இறங்கி, பெரம்பலூர் வட்டத்தில் ஒரு வலிவான இயக்கமாகும்வரை பொதுமக்கள் தங்களின் அன்பையும் - ஆதரவையும் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்

அன்பன்

பி. ஆர். இரத்தினசாமி

★

பொதுத் தேர்தலில் கோவில்பட்டி தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்காக அயராது உழைத்த நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், கொள்கைக் காகவும் இலட்சியத்திற்காகவும் வாக்களித்த பொது மக்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

அ. சு. சி. பொன்னுசாமி.

நடைபெற்ற தேர்தலில் சென்னை சட்டமன்றத்திற்கு சிவகங்கை தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும் பணியாற்றிய கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள்—நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தோல்வியுற நேர்ந்தாலும் அயர்ச்சியுறத் தேவையில்லை. பிற்போக்கு சக்திகளையும்—அறியாமை நோயினையும் வீழ்த்திட என்றும்போல் போராடுவேன்—போராடுவோம்! துவளாமல், துயருறாமல் தூயபணி ஆற்றுவோம். நன்றி.

அன்பன்

வி. வீரப்பன்

★

பொதுத் தேர்தலில் மேட்டூர் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகனாக நின்ற எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும், குறிப்பாக தொழிலாளர்—விவசாய பெருங்குடி மக்களுக்கும், எனக்காக அல்லும் பகலும் பாடுபட்ட அருமைத் தொண்டர்களுக்கும் தோழர்களுக்கும், பெரியோர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இனியும் என்றும் தி. மு. கழகத்தில் எனது பணியைத் தொடர்ந்து ஆற்றுவேன் என்பதை உறுதி கூறுகிறேன்.

அன்பன்,

க. கு. சின்னுசாமி

அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

திருச்சி - தேவதானம் :

16—4—57 மாலை 4½ மணிக்கு திருச்சி-தேவதானத்தில், தோழர் முத்துக்கருப்பன் தலைமையில், அண்ணா அவர்கள், தி. மு. கழகக் கட்டிடத்திற்கு கால்கோள் விழா ஆரம்பித்து சொற்பொழிவாற்றினார்கள்.

மாலை 5 மணிக்கு, தோழர் மாரியப்பன் அவர்கள் புதல்விக்கு அண்ணா அவர்கள் 'மலர்க்கொடி' எனப் பெயரிட்டார்கள். அதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

வரவேற்புகள்

அண்ணா அவர்கள், பெரம்பலூர் செல்லும் வழியில், பிக்சாண்டார் கோவில் டோல்கேட், கடத்தூர், பழூர் தி.மு. கழகத் தோழர்கள் அண்ணா அவர்களை வரவேற்றும் மலர் மாலைகள் அணிவித்தும், இளநீர் வழங்கியும் உபசரித்து வழியனுப்பி வைத்தார்கள். அண்ணாவுடன் தோழர்கள் சி.வி. இராசகோபால், ம. கி. தசரதன், அ. பொன்னம்பலனர் ஆகியோர் பயணமானார்கள்.

பெரம்பலூர் :

மாலை 7 மணிக்கு அண்ணா அவர்களுக்கு பெரம்பலூர் லட்சுமி ஸ்ரீநிவ டாக்கீஸ் உரிமையாளர்களால், ஓர் பாராட்டு விருந்தும், வரவேற்பிதழ் ஒன்று வாசித்தும் அளிக்கப்பட்டது.

பொதுக்கூட்டம்

இரவு 7-30 மணிக்கு பெரம்பலூர் ரேடியோ திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆதிமூலம் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர் பி. ஆர். இரத்தினசாமி, அ. பொன்னம்பலனர் ஆகியோர் கழகம் தேர்தலில் பெற்ற வெற்றிகளைப் பற்றிப் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேச எழுந்ததும், பல மன்றங்கள், தி. மு. கழகக் கிளைகள், தொழிற் சங்கத் தோழர்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவித்தும், கைத்தறித் துண்டுகள் வழங்கியும், சில்லரை நிதிகளாக ரூ. 14—14 காசுகளும் வழங்கினர்கள்.

அண்ணா அவர்கள், தி. மு. கழகம், சமூக-அரசியல் - பொருளாதார விடுதலைக்காகவும், திராவிட நாட்டுக்கு தனியாட்சி ஏற்படப் பணியாற்றுமென்றும், வெளியிலும்-சட்டமன்றத்திலும் நம் குரல் தொடர்ந்து ஒலிக்கும் என்று கூறி பாராட்டுக்கும்-வரவேற்புக்கும் நன்றி கூறினர்.

எசனை ஊராட்சி மன்றம் வரவேற்பு

அன்று, இரவு 10 மணிக்கு, எசனை ஊராட்சி மன்றச் சார்பில் அண்ணா அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று, ஊராட்சி மன்றச் சார்பிலும், தி. மு. கழகச் சார்பிலும் வரவேற்பிதழ்கள் படித்துக் கொடுத்து, மலர்மாலைகள் அணிவித்தார்கள்.

அண்ணா அவர்கள் வரவேற்புக்கும், கழகத் தோழர்களுக்கும் நன்றி கூறி சிறப்புரையாற்றினர்.

தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பூலாம்பாடி :

இரவு 12,மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் அண்ணா அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்; பின்னர், தோழர் ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள், தோழர்கள் பி. ஆர். இரத்தினசாமி, அ. பொன்னம்பலனர் ஆகியோர் தேர்தலில் நாம் பெற்ற வெற்றித் தோல்விபற்றியும், கழகக் கொள்கைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

ஆசிரியருக்குக் கடிதம்:

ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கும், இராஜா & குமாரபாளையம் வாய்க்கால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நன்றி!

ஐயா,

19-3-57-ல் தண்டோரா மூலம் சேலம் கலெக்டர் அவர்கள் உத்திரவின்படி, 15-4-57-லிருந்து, 15-5-57 வரை ராஜா வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்படும்' என்று அறிவிக்கப்பட்டது.

22-3-57-ல் நாமக்கல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் மேற்படி பாசன விவசாயிகள், சேலம் கலெக்டரை சந்தித்து, முன் எச்சரிக்கையின்றி தற்போது ஒரு மாதகாலத்திற்கு 'தண்ணீர் நிறுத்துவதால் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கும்—பொது மக்களுக்கும் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக்கூறி, தண்ணீர் நிறுத்தக்கூடாதென கேட்டுக்கொண்டார்கள்.

மேலும், விவசாயிகள் மார்ச் 26, 27-ந் தேதிகளில் வாய்க்கால் சம்பந்தப்பட்ட எஞ்சினியர்களையும், 28, 29-ந் தேதிகளில் கலெக்டர் அவர்களையும், ஏப்ரல் 4-ந்தேதி சென்னை ரெவின்யூ போர்டாரையும், வாய்க்கால் சம்பந்தப்பட்ட தலைமை எஞ்சினியர்களையும், நேரில் கண்டு தங்களுக்குண்டாகும் கஷ்டங்களையும், ஏற்படும் நஷ்டங்களையும் புள்ளி விவரத்தோடு காட்டி தண்ணீர் நிறுத்தக்கூடாதெனக் கேட்டுக் கொண்டார்கள்.

விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்கி 15-4-57-லிருந்து தண்ணீர் நிறுத்தாமல் விடுவதற்காக, வாய்க்கால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், உடன் ஒத்துழைத்த ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இராஜா & குமாரபாளையம் விவசாயிகள்.

மக்கள் முன்னேற்ற மன்றத் திறப்பு விழா

13—4—57 மாலை 5½ மணிக்கு சென்னை—இராயபுரம் மக்கள் முன்னேற்ற மன்றத் திறப்பு விழா, இராயபுரம், மார்க்கெட் சந்தில், தோழர் தேவராசன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் வே. திருநாவுக்கரசு அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

தலைவரின் முன்னுரைக்குப் பின், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் மன்றம் ஆற்றவேண்டிய பணிகளை விளக்கிப் பேசினர்.

அடுத்து, தோழர் என். சிவராத்தினம் மன்ற வளர்ச்சி குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மன்றத்தைத் திறந்துவைத்து, கழகத்திற்கும் மன்றத்திற்கும் உள்ள ஒற்றுமை-வேற்றுமைகளை விளக்கியும் மன்றத் தோழர்களைப் பாராட்டியும் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் திறப்பு விழா இனிது முடிவுற்றது.

பிளாஸ்டிக் சாமான்கள் ஏற்றுமதி குறைந்ததற்குக் காரணம் என்ன?

இந்திய வியாபாரிகளின் போட்டியால் ஏற்பட்டுள்ள விபரீத நிலைமை

மட்டரகப் பொருள்களை பயன்படுத்துவதாக உற்பத்தியாளர் மாநாட்டில் கண்டனம்

பம்பாய், எப். 22—

கடும் போட்டியின் காரணமாக வெளிநாட்டு மார்க்கெட்டுகளில் பிளாஸ்டிக் சாமான்கள் குறைந்து வருவது குறித்து கவலை தெரிவித்தும், உற்பத்தியாளர்கள் மட்டரகப் பொருள்களை உபயோகப்படுத்துவதைக் கண்டித்தும் பத்தாவது அ. இ. பிளாஸ்டிக் சாமான்கள் உற்பத்தியாளர் சங்க மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இம்மாநாட்டில் பேசிய மத்திய வர்த்தகத் தொழிலமைச்சர் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டதாவது :—

"வர்த்தகர்கள் போட்டா போட்டியில் தங்களுக்குள்ளேயே விலைகளைக் குறைத்து வருவதால் நேர்மையான தொழில் வளர்ச்சிக்குப் பாதகமேற்படுகிறது.

"தாங்கள்தாம் வாழவேண்டும்—மற்றவர்களை எப்படியாவது இத்துறையிலிருந்து ஒழித்துவிட வேண்டும் என்கிற நோக்கத்தால் தான் இந்த போட்டாபோட்டி விலை குறைப்பு முறை கையாளப்படுகிறது; அதைக் கைவிட்டுவிட வியாபாரிகள் முன்வர வேண்டும்."

விற்பனை வரியால் தொழில் அபிவிருத்தி தடைப்படுகிறதென்றக் கூற்றை அவர் மறுத்தார். விற்பனை வரி வசூல் பெருகி வருகிறதென்றும் பாக்கித் தொகை குறைந்து வருகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

"ஏற்றுமதிகள் குறைந்து வருவது விசித்திரமாக இருக்கிறது. வெளிநாட்டு நாணய வசதி குறைந்துள்ள நிலையில் பிளாஸ்டிக் பொருள்களை அதிகமாக ஏற்றுமதி செய்வது முக்கியமாகும்; இத்தொழில் அபிவிருத்திக்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவசரச் சட்டத்திற்கு ஊழியர்கள் கண்டனம்

சென்னை, எப். 22—

"அரசாங்கம் பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் ஜனநாயகத்திற்கு விரோதமானது; எதேச்சாதிகாரமானது; அரசாங்கம் கொண்டுள்ள விரோத மனப்பான்மையின் எதிரொலியாகும்" என்ற பொருள்பட, சென்னையில் நடைபெற்ற இன்ஷ்யூரன்ஸ் சிப்பந்திகள் கூட்டமொன்றில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இப்பிரச்சினையில் இன்ஷ்யூரன்ஸ் ஊழியர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி சுமுகமான முடிவு காண வேண்டுமென தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் சுமார் 500 இன்ஷ்யூரன்ஸ் ஊழியர்கள், சென்னை - எஸ்பிளனேடிலுள்ள யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் கட்டிடத்தின்முன், அரசாங்கம் கொண்டு வந்துள்ள அவசரச் சட்டத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

250 ஆண்டு காலமாக நிலவிய

சட்டம் தகர்கிறது!

பால்டிமூர், எப். 21—

மேர்லாந்து சட்டப்படி, வெள்ளை மாது ஒரு நீக்ரோவை மணப்பதோ, குழந்தை பெற்றுக் கொள்வதோ குற்றமாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

சமீபத்தில் பால்டிமூர் நீதிமன்றத்தில் 20-வயதுள்ள ஒரு அமெரிக்க மாது, நீக்ரோ ஒருவர் மூலம் குழந்தை பெற்றுக்கொண்டதற்காக குற்றம் சாட்டப்பட்டு வழக்கு விசாரணைக்கு வந்தது.

குழந்தையைப் பாதுகாக்க நீக்ரோ தகப்பன் உதவவேண்டும் என்று அந்த யுவதி பொதுமக்கள் உறவு இலாகாவிடம் விண்ணப்பித்துக் கொண்டபோதுதான் அப்பெண்மீது வழக்குத் தொடரப்பட்டதாம்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தீர்ப்பளிக்கையில், 'நீக்ரோ மூலம் குழந்தை பெற்றுக்கொள்வது சட்டப்படி குற்றமாகாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

பால்டிமூர் வரலாற்றிலேயே இத்தகைய சம்பவம் நிகழ்வது இதுவே முதல் தடவையாகும்.

தியாகிகளுக்கு நிலம் வழங்கப்படுமாம்

ஐதராபாத், எப். 22—

'நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆந்திர சட்டசபையில் சட்டம் நிறைவேற்றப்படும் என்று ரெவினியூ அமைச்சர் காளா வெங்கட்ராவ் தெரிவித்துள்ளார்.

இதுவரை 4,000 தியாகிகளுக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும், 1,000 தியாகிகளுடைய மனுக்கள் பரிசீலனையில் உள்ளது என்றும், அவர்களுக்கும் 'பட்டா' நிலங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

'நயா பைசா'வால் ஏற்பட்ட குழப்பம்!

அதிகாரிகள் விளக்கம்

சென்னை, எப். 22—

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தசாம்ச முறையைப் பின்பற்றிக் கொண்டு வரப்பட்டுள்ள 'நயா பைசா' நாணயங்கள் விளைவித்துள்ள பல குழப்பங்களுடன், இப்போது ஒரு புதிய குழப்பமும் கிளம்பியுள்ளது. தற்போது இரண்டு விதமான நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன. சில நாணயங்களில், 1957 எனும் இலக்கத்திற்குக் கீழ் ஒரு புள்ளியும், சிலவற்றில் அது இல்லாமலும் இருக்கிறதாம்!

புள்ளி இல்லாத நாணயங்கள் கள்ள நாணயம் என்று சிலர் சந்தேகித்து, வாங்குவதற்கு மறுத்துவிட்டனராம்!

இந்தக் குழப்பத்திற்கு ரிசர்வ் பாங்கி அதிகாரிகள் விளக்கம் தந்துள்ளனர்.

'நயா பைசா' நாணயங்கள் பம்பாயிலும், அலிப்பூரிலும் அச்சிடப்பட்டதாம்!

பம்பாயில் அச்சிடப்பட்ட நாணயங்களில் புள்ளி உண்டு என்றும், அலிப்பூரில் அச்சிடப்பட்டவைகளில் புள்ளி இல்லை என்றும், எனவே கள்ள நாணயம் அச்சிடப்பட்டிருப்பதாக கருதுவது சரியல்ல என்றும், எல்லா நாணயங்களும் செல்லுபடியாகும் என்றும் அறிவித்துள்ளனர்.

சென்னை-இரங்கூன் விமான போக்குவரத்து

சென்னை, எப். 23—

இப்போது சென்னையிலிருந்து பர்மாவுக்கு நேரடியான விமானப் போக்குவரத்து வசதி இல்லை; எனவே, விரைவில் மாதம் இரு முறை சென்னையிலிருந்து இரங்கூனுக்குச் செல்வதற்குப் போதுமான பிரயாணிகள் இருப்பதால் நேரடி விமானப் போக்குவரத்து ஏற்படுத்தப்படலாம் என்று தெரியவருகிறது.

கழகக் கூட்டம்

★

திண்டுக்கல்:

காந்தியார் திடல்

24—4—57 மாலை 7 மணிக்கு

தலைவர் : பி. கந்தசாமி

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
என். முத்து
ஏ. சுப்பையா
ம. சுந்தரராசு

தி. மு. க.-எம்.எல்.ஏ.,எம்.பி.க்களுக்கு

பாராட்டுக் கூட்டம்

★

திருவண்ணாமலை — கீழ்நாத்தூர் தி. மு. கழகச் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. நடிமலிங்கம் ஆகியோரையும், சட்டமன்ற உறுப்பினர்களான தோழர் ப. உ. சண்முகம், சந்தானம் ஆயோரையும் பாராட்டி ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர் அன்பில் நடிமலிங்கம் அவர்கள் கலந்து கொள்வார்.

(தேதியும்—இடமும் குறிப்பிடப்படவில்லை.)

சிருவந்தாடில் ஏ. கோவிந்தசாமி

அவர்களுக்குப் பாராட்டு

25—4—57 மாலை 6-மணிக்கு சிருவந்தாடு (கிராமம்) தி. மு. கழகச் சார்பில், புலவர் எம். கிருட்டிணன் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பாராட்டுரை வழங்குவார்; தோழர் ஏ. கோவிந்தசாமி நன்றியுரை வழங்குவார்.

சென்னை—வண்ணை

நே. எஸ். பாண்டியன் படிப்பக

5-ம் ஆண்டுவிழா

25—4—57 மாலை 6-மணிக்கு, மேற்படி படிப்பக ஆண்டுவிழா, வண்ணை—நாராயணப்ப நாய்க்கன் தெரு 8-வது சந்தில் (சரு ஞானசேகரர்ஸ் அருகில்), தோழர் அ. பெ. அரசு தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். சிவரத்தினம், எஸ். எஸ். தென்னரசு, டி. பி. சுந்தரம், பி. எம். இராமையா மற்றும் பலர் பேசுவர்.

தஞ்சையில் காஸ்டிக் சோடா தொழிற்சாலை

தனியார் நடத்த முன்வர வேண்டுமாம்

சென்னை அரசின் கூற்று

தஞ்சை, எப். 19—

தஞ்சை மாவட்டத்தில் காஸ்டிக் சோடா தொழில் நடத்துவதற்குத் தேவையான சாதனங்கள் இருப்பது அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தஞ்சையில் இத்துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவ அரசாங்கம் திட்டம் வகுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், அரசாங்கம் இதற்கு ஆதரவுகாட்ட முன்வரவில்லை என்று நேற்று நடைபெற்ற திட்டக்குழுக் கூட்டத்தில் சர்தார் வேதரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த காஸ்டிக் சோடா தொழிற்சாலை நிறுவ ரூ. 60 இலட்சம் தேவைப்படுகிறதாம். எனவே, தனிப்பட்ட நபர்கள் முன்வந்தால் அரசாங்கம் வேண்டிய உதவிகளை அளிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்று மாவட்டக் கலெக்டர் அறிவித்துள்ளாராம்.

'சனநாயக முறைக்கு ஏற்றதல்ல'

'பிற்கால சந்ததியினருக்கு வழிகாட்ட இயலாதது'

புதுடில்லி, எப். 23—

தற்போது இந்தியக் குடியரசுத் தலைவராக உள்ள இராசேந்திர பிரசாத் அவர்களே மீண்டும் அப்பதவிக்குப் போட்டியிடுகிறார்.

"நாட்டின் இத்தகைய ஒரு பெரிய பதவிக்கு ஒருவரை அபேட்சகராக நியமிக்குமுன் காங்கிரஸ் தலைவர்கள் எதிர்க்கட்சியினரையும் கலந்து ஆலோசிக்காமல் முடிவு செய்வது வருந்தத்தக்கது" என்று, கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது; அவ்வாறு செய்யாத காரணத்தால் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் நடைபெறவிருக்கும் மக்கள்சபைத் தலைவர் தேர்தலில் பங்குகொள்ளப்போவதில்லை என்று தெரியவருகிறது.

"ஒரே நபரை மீண்டும் மீண்டும் அதே பதவிக்கு நியமிப்பது நல்ல சனநாயகத்திற்கு ஏற்றதல்லவென்றும், பிற்காலச் சந்ததியினருக்கு இது ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்காது என்றும் அக்கட்சியினர் கருதுகின்றனர்.

தென் மண்டலக் குழு செயல்படுமா?

சென்னை, எப். 22—

சென்னை, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் பிரதிநிதிகள் அடங்கிய தென் மண்டலக் குழு, மே மாதம் 5-ம் தேதி கூடுவதாக இருந்தது; இந்தத் தேதியில் கூட்டம் நடைபெறாது என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள்சபைத் தலைவர் தேர்தல் 6-ந் தேதி நடைபெற இருப்பதே இதற்குக் காரணம்!

மீண்டும் இந்தத் தென் மண்டலக்குழு எப்போதுதான் கூட்டப்படும் என்பதைப் பற்றியோ, எல்லைப் பிரச்சினைக்கு ஏதேனும் முடிவு காணப்படுமா என்பதைப் பற்றியோ தகவல் ஏதும் தரப்படவில்லை!

கல்விக் கட்டணச் சலுகை விஸ்தரிப்பு

உள்ளாட்சிக் கழகங்களின் ஊழியர்களுக்குக் கிடைக்குமா?

சென்னை, எப். 22—

1956-ம் ஆண்டில் அனுமதித்த 4-வது பாரம் முதல் 6-வது பாரம் வரையில் சம்பளச்சலுகை தரும் அரசாங்கத் திட்டத்தை ஸ்தல ஸ்தாபனங்களின் கடைநிலை ஊழியர்கள் உட்பட மற்ற பிரிவுகளின் ஊழியர்களுக்கும் அளிப்பது பற்றி சென்னை அரசாங்கம் இப்போதுதான் யோசித்து வருகிறதாம்!

இந்தத் தகவலை சென்னை நகரசபை ஆணையாளருக்கு அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

இமயத்தின் அடிவாரத்தில் எண்ணெய்கண்டுபிடிப்பு

30 கோடி ரூபாய் செலவாகும்

இமயமலையின் அடிவாரமான சிவாலிக் தொடரில் சுவாலாமுகி ஆலயத்திற்கு 1,000 அடி உயரத்திற்கு மேல் ஒரு இடத்தில் எண்ணெய் கண்டு பிடிப்புக்கான வேலை ஆரம்பமாகிவிட்டது.

ரூ. 40 இலட்சம் செலவில் ருமேனியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட துளையிடும் கருவியைப் பஞ்சாப் கவர்னர் இயக்கிவைத்தார்.

இந்த ஆலயத்திற்கு அருகே பல நூற்றாண்டுகளாக இயற்கை வாயு எரிந்துகொண்டு இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 30 கோடி செலவிடப்படுமாம்!

சென்னை—3-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம்

23—4—57 மாலை 7-மணிக்கு, மேற்படி தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும். தோழர்கள் அனைவரும் வருகைதர வேண்டப்படுகிறார்கள்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சியின் போக்கு

அணுசக்தி சோதனைகளை நிறுத்துவதற்கு எதிர்ப்பு

லண்டன், எப். 22—

இரஷ்யா நடத்திவரும் அணு சக்தி ஆயுதச் சோதனைகளை நிறுத்தவேண்டும் என்று பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி மாநாட்டில் ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டதாம்!

இந்தத் தீர்மானத்தைக் கண்டித்துப் பலர் ஆவேசமாகப் பேசினராம்!

ஒரு சிலர், 'தீர்மானத்தை வாபஸ் பெறவேண்டும்' என்று கூச்சலிட்டனராம்!

படுகொலைப் பட்டியல் விரிவடைகிறது!

ஏகாதிபத்தியத்தின் வெறிச்செயல்

அல்ஜீரியா, எப். 20—

பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் உள்ள அல்ஜீரியா விடுதலை பெற்று சுதந்திர நாடாகத் திகழ வேண்டும் என்று மக்கள் போராட்டம் நடைபெற்று வருவதும், கிளர்ச்சி செய்யும் மக்களை அடக்கப் பிரெஞ்சு போலீஸ் பயங்கர அடக்கு முறைகளைக் கையாண்டு வருவதும் தெரிந்த ஒன்றாகும்.

கடந்த 24 மணி நேரத்தில் பிரெஞ்சு இராணுவத்தினர் 123 - அல்ஜீரிய விடுதலை வீரர்களைக் கொன்றும், 30 பேர்களைப் படுகாயப்படுத்தியும், இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

புறம்போக்கு நிலங்கள் பகிர்ந்து தரப்படும்

புள்ளி விவரங்கள் சேகரிக்குமாறு உத்தரவு

திருச்சூர், எப். 22—

கேரள மாநிலத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களைப்பற்றிய தகவல்களையும், புள்ளி விவரங்களையும் தயாரித்து அரசாங்கத்திற்குத் தருமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாக மாநில நிதி அமைச்சர் அச்சுத மேனன் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்குத் தேவையானவைபோக பாக்கி நிலங்களை உழவர்களுக்குப் பகிர்ந்து தரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1,000 இந்திய டாக்டர்கள் மலேயாவுக்கு மனு செய்துள்ளனர்

கோலாலம்பூர், எப். 23—

மலேயா அரசாங்க நிறுவனத்தில் 100 பேருக்கு மட்டும் வேலை காலி இருக்கிறதாம்; ஆனால், இதற்காக 1,000 இந்திய டாக்டர்கள் மனுச் செய்துகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.